உ

இஃது.

திருவெண்காடனென்னும்

இயற்பெயரினையுடைய

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்ததிருப்பாடற்றிரட்டு.

இதனுள்.

அகவல் - கலித்துறை - வெண்பா.

இம்மூன்றும்

அடங்கியிருக்கின்றன

இவை - பலபிரதிகளைக்கொண்டு

பரிசோதித்து

சீவரம்-பட்டாமணியம்.

வரதப்பிள்ளையவர்கள்குமாரராகிய

பாலகிருஷ்ணப்பிள்ளையவர்களால்

சித்தாத்திரிப்பேட்டை

கேசவமுதலியாரவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை - அணா-அ.

உ

கணபதி துணை.

## பட்டணத்துப் பிள்ளையாரருளிச்செய்த
## முதலாவதுகோயிற்றிருவகவல்.

நினைமின் மனனே நினைமின் மனனே .. *
சிவபெருமானைச்செம்பொனம்பலவனை......*
நினைமின் மனனே நினைமின்மனனே ..... *
அலகைத்தேரினலமருகாலின் .... ........ ....... *
உலகப்பொய்வாழ்க்கையை யுடலையோம்பற்க
பிறந்தனவிறக்குமிறந்தனபிறக்கும் .... ....... *
தோன்றினமறையுமறைந்தனதோன்றும் .. *
பெருத்தனசிறுக்குஞ்சிறுத்தனபெருக்கும். *
உணர்ந்தனமறக்குமறந்தனவுணரும் ..... ... *
புணர்ந்தனபிரியும்பிரிந்தனபுணரும் .... ... *
அருந்தினமலமாம்புனைந்தனவழுக்காம். ... *
உவப்பனவெறுப்பாம்வெறுப்பனவுவப்பாம்
என்றிவையனைத்துமுணர்ந்தனையன்றியும் *
பிறந்தனபிறந்தனபிறவிகட்டோறும் ..... . ..... *
கொன்றனையனைத்து மனைத்துநினைக்கொன்ற
தின்றனையனைத்துமனைத்துநினைத்தின்றன. (ன
பெற்றனையனைத்துமனைத்துநினைப்பெற்றன *
ஓம்பினையனைத்து மனைத்துநினையோம்பின... *
செல்வத்துக்களித்தனை தரித்திரத்தழுங்கினை. *

சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை ........ *
இன்பமுந் துன்பமுமிருநிலத்தருந்தினை .. *
ஒன்றொன்றொழியா துற்றனையன்றியும் .... *
புற்புதக்குரம்பைத்துச்சிலொதுக்கிடம் ...... *
என்னநின்றியங்குமிருவினைக்கூட்டைக் ..... *
கல்லினும்வலிதாக்கருதினையிதனுள் .... .... *
பூளையுநீரும்புறப்படுமொருபொறி..... ..... *
மீளுங்குறும்பிவெளிப்படுமொருபொறி.... *
சளியுநீருந்தவழுமொருபொறி ....... ... ..... *
உமிழ்நீர்கோழையொழுகுமொருபொறி... *
வளியுமலமும்வழங்குமொருவழி .... .... ..... *
உள்ளூறத்தொடங்கிவெளிப்படநாறும்.... *
சட்டகமுடிவிற்சுட்டெலும்பாகும் ........... *
உடலுறுவாழ்க்கையையுள்ளுறத்தேர்ந்து ..... *
கடிமலர்க்கொன்றைச்சடைமுடிக்கடவுளை . *
ஒழிவருஞ்சிவபெரும்போகவின்பத்தை .. .... *
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி .. *
எனதறநினைவறவிருவினைமலமற.... ..... ....... *
வரவொடுசெலவறமருளறவிருளற ......... .. *
இரவொடுபகலறவிகபரமறவொரு.... ....... *
முதல்வனைத்தில்லையுண் முளைத்தெழுஞ்சோதி
அம்பலத்தரசனையானந்தக்கூத்தனை ...... (யை
நெருப்பினிலரக்கெனநெக்குநெக்குருகித்; *
திருச்சிற்றம்பலத்தொளிருஞ்சிவனை ......... .. *
நினைமின்மனனே நினைமின்மனனே ..... ..... *

சிவபெருமானைச்செம்பொனம்பலவனை...... *
நினைமின்மனனே நினைமின்மனனே .. ..(க)

(இரண்டாவதுசோயிற்றிருவகவல்.)

காதகவேவாடியபலகப்பாதகக்............... *
கண்ணியர்மருங்கிற்புண்ணுடனுடங்...... ......*
காதலுங்கருத்துமல்லானின்னிருதாட்..... .... *
பங்கயஞ்சூடப்பாக்கியஞ்செய்யாச்........... *
சங்கடங்கூர்ந்ததமியேன்பாங்கிருந்..... ..... *
தங்சோடிங்கோடலமருங்கள்வர்...... ........ ...*
ஐவர்கலகமிட்டலைக்குங்கானகம்...... ... ..... *
சலமலப்பேழையிருவினைப்பெட்டகம்..... .. *
வாதபித்தங்கோழைகுடிபுகுஞ்சீறூர்........... *
ஊத்தைப்புன்றோலுதிரக்கட்டளை ... .. .. *
நாற்றப்பாண்டநான்முழத்தொன்பது ..... *
பீற்றற்றுண்டம்பேச்சுமைத்தோட்டம் .. ... *
அடலைப்பெரியசுடலைத்திடருள் ... ........... *
ஆசைக்கயிற்றிலாடும்பம்பரம் ... ....... .. .. *
ஓயாநோய்க்கிடமோர்டுமரக்கலம்..... ....... *
மாயாவிகாரமரணப்பஞ்சரம் .... ............ *
சோற்றுத்துருத்திதாற்றுப்பத்தம் ... ....... *
காற்றிற்பறக்குங்கானப்பட்டம்.... ........ *
விதிவழித்தருமன்வெட்டுங்கட்டை... ....... *
சதுர்முகபாணன்றைக்குஞ்சட்டை..... ....... *
ஈமக்கனலிலிடுசிலமருந்து .. ... ...... ...... *
காமக்கனலிற்கருகுஞ்சருகு........ ....... *

இருமிகிண்டுங்கிழங்குஞ்சருமி ... ... ... *
யவக்கொழுந்தேறுங்கவைக்கொழுகொம்பு. *
மணமாய்நடக்கும்வடிவின்முடிவிற் ... ... *
பிணமாய்க்கிடக்கும்பிண்டப்பிணமே ... *
ஊரிற்கிடக்கவொட்டாவுபாதி ... ... ... *
காலெதிர்குவித்தபூளைகாலைக் ... ... ... *
கதிரெதிர்ப்பட்டகடும்பனிக்கூட்டம் ... ... *
அந்தரத்தியங்குமிந்திரசாபம் ... ... ... *
அதிருமேகத்துருவினுருநிழல் ... ... *
நீரிற்குமிழிநீர்மேலெழுத்து ... ... *
கண்டுயில்கனவிற்கண்டகாட்சி ... ... ... *
அதனினும்பொல்லாமாயக்களங்கம் ... ... *
அமையுமமையும்பிரானேயமையும் ... ... *
இமயவல்லிவாழியென்றேத்த ... ... ... *
ஆனந்தத்தாண்டவங்காட்டி ... ... ... *
ஆண்டுகொண்டருள்கைநின்னருளினுக்கழகே

(மூன்றாவதுகோயிற்றிருவகவல்) (௨)

பாற்கடல்கடையப்படுங்கடுவெண்ணெயைத் *
திருமிடற்றடக்கியசிவனேயடைக்கலம் ... *
அடங்கலுமடக்கிடுங்கடுங்கொலைக்காலனைக். *
காலெடுத்தடக்கியகடவுணின்னடைக்கலம். *
உலகடங்கலும்படைத்துடையவன்றலைபறித் *
திடக்கையிலடக்கியவிறைவநின்னடைக்கலம் *
செய்யபொன்னம்பலச்செல்வநின்னடைக்கல
ஐயநின்னடைக்கலமடியநின்னடைக்கலம். (ம்

மனவழியலைத்திடுங் கனவெனும்வாழ்க்கையும்
விழுப்பொருளறியாவழுக்குறுமனனும் ..... *
ஆணவமலத்துதித்தளைந்ததிலுளைந்திடு. . . *
நிணவைப்புழுவெனநெளித்தி[illegible]ந்தையும் *
படிறும்பாவமும்பழிப்புறுநினைப்பும் ..... *
தவறுமழுக்காறுமிவறுபொச்சாப்பும். . . . . *
சவடும்பொய்யுஞ்சுவடும்பெருஞ்சின ..... . . *
விகலுங்கொலையுமிழிப்புறுபுன்மையும். . . . . *
பகையுமச்சமுந்தணிவும்பலிப்பும் ...... ... *
முக்குணமடமையுமைம்பொறிமுயக்கமும் *
இடும்பையும்பிணிமிடிக்கியவாக்கையை ... *
உயிரெனுங்குருவிட்டோடுங்குரம்பையை .. *
எலும்பொடுநரம்புகொண்டிடையிற்பிணித்து
கொழுந்தசைமேய்ந்து மொழுக்குவிழுங்குடி
லைச், செழும்பெருவுதிரச்சிறுபுழுக்குரம்பை
யை,மலவுடற்குடத்தைப்புலவுடற்புட்டிலைத் *
தொலைவிலாச்சோற்றுத் துன்பக்குழியைக் ... *
கொலைப்படக்கலம்பல கிடக்குங்கூட்டைச் ... *
சலிப்புறுவினைப்பலசரக்குக்குப்பையைக்... *
கோட்சரச்சொழுகும்பிறற்கோணியைக் ...... *
கோபத்தீமூட்டுங்கொல்லன்றுருத்தியை ... *
ஐம்புலப்பறவையடையும்பஞ்சரத்தைப் ... *
புலராக்கவலைவிளைமரப்பொதும்பை.... .... *
ஆசைக்கயிற்றிலாடும்பம்பரத்தைக் .... .... *
காசிற்பணத்திற்சுழலுங்காற்றாடியை, ..... ..... *

மக்கள்வினையின் மயங்குந்திகிரியைக் ........ *
கடுவெளியுருட்டியசகடக்காலைப் ............ *
பாவச்சரக்கொடு பவக்கடல்புக்குக் ..... ..... ..... *
காமக்காற்றெடுத்தலைப்பக் ........... ........ *
கெடுவழிக்கரைசேர் கெடுமரக்கலத்தை..... ...*
இருவினைவிலங்கொடுமியங்குபுற்கலனை ..... *
நடுவன்வந்தழைத்திட நடுங்கிடும்யாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழுது
நின், அடிமலர்க்கமலத் துக்கபய நின்னடைக்க
லம்; வெளியிடையுருமிடியிடித்தெனவெறித்
தெழுங். கடுநடுவெள்விடைக்கடவணின்னடை
க்கலம், இமையா நாட்டத்திறையேயடைக்கலம்
அடியார்க்கெளியாயடைக்கலமடைக்கலம்...*
மறையவர்தில்லைமன் றுணின்றாடிக்.......... ..... *
கருணைமொண்டலையெறிகடலேயடைக்கலம்.
தேவருமுனிவருஞ்சென்று நின்றேத்தப் ...... *
பாசிழைக்கொடியொடுபொருந்தருள்புரியும் ....*
எம்பெருமானின்னிணையடிக்கபயம் .... .....*
அம்பலத்தரசேயடைக்கலமுனக்கே........ ... *

நான்காவது கச்சித்திருவகவல்.)

திருமால்பயந்ததிசைமுகனமைத்து....... ..... *
வருமேழ்பிறவியுமானிடத்துதித்து .... ..... . *
மலைமகள்கோமான்மலரடியிறைஞ்சிக்..... .....*
குலவியசிவபதங்குறுகாதவமே.. ..... ..... .....*
மாதரொமகிழ்ந்துகாதல்கொண்டாடும் .... .....*

மானிடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன் *
வி[illegible]வெளிமாக்கவெளிவறக்கேண்மின்........ *
முள்ளுங்கல்லுமுயன்றுநடக்கும்...... ..... *
உண்ணுங்காலைப்பஞ்செனவுரைத்தும்..... .... *
வெள்ளெலும்பாலமேவியகணைக்கால். .... *
துள்ளும்வராலெனச்சொல்லித்துதித்தும். *
தசையுமெலும்புந்தக்கபுன்குறங்கை.......... .. *
இசையுங்கதலித்தண்டெனவியம்பியும் .... .. *
நெடுமுடைநாறுங்கிநின்றிடுமிடையைத்..........*
துடிபிடியென்றுசொல்லித்துதித்தும் ..... *
மலமுஞ்சலமும்வழும்புந்திரையும்..... ... ... *
அலையும்வயிறனையாலிலையென்றும் .. ...... *
சிலந்திப்பாலக்கிளைத்துமுன்னெழுந்து..... . *
திரண்டுவிம்மிசீப்பாய்ந்தேறி ....... ..... ..... *
உகிராற்கீறவுலர்ந்துள்ளுருகி............. ... *
நகுவார்க்கிடமாய்நான்றுவற்றும்..... ..... ... *
முலையைப்பார்த்துமுளரிமொட்டென்றும். *
குலையுங்காமக்குருடர்க்குரைப்பேன் ..... ..... *
நீட்டவுமுடக்கவுநெரிப்பொருள்வாங்கவும் . *
ஊட்டவும்பிசையவுமுதவியிங்கியற்றும் .. *
அங்கையைப்பார்த்துக்காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்குமேவியகழுத்தைப் ... ..... *
பாரினிலினியகமுகெனப்பகர்ந்தும் ... ....... *
வெப்புமூத்தையுமேவியவாயைத்.... ......... *
துப்புமுருக்கின்றாய்மலரென்றும் ........ ... *

அன்னமுங்கறியுமசைவிட்டிறக்கும் ...... ...... *
முன்னியபல்லைமுத்தெனமொழிந்தும் ...... *
நீருஞ்சளியுநின்றுநின்றொழுகும் ...... ..... ..... *
கூரியமூக்கைக்குமிழெனக்கூறியும் ... ...... *
தண்ணீர்பீளைதவிராதொழுகும் ........ ...... *
கண்ணைப்பார்த்துக்கழுநீரென்றும் ........... ... *
உள்ளுங்குறும்பியொழுகுங்காதை ... ...... *
வள்ளைத்தண்டின்வளமெனவாழ்த்தியும் .... *
கையுமெண்ணையுங்கலவாதொழியில் .... .... *
வெய்யவதரும்பேனும்விளையத் .... ...... .... *
தக்கதலையோட்டின்முளைத்தெழுந்த .. ...... *
சிக்கின்மயிரைத்திரண்முகிலென்றும் ......... *
சொற்பலபேசித்துதித்துநீங்கள் .. .. .......... *
நச்சிச்செல்லுநரகவாசல் ... ....... ..... ...... *
தோலுமிறைச்சியுர்துதைத்துசீப்பாயும் ...... *
காமப்பாழிகருவிளைகழனி ...... ...... .......... *
தூமைக்கடவழிதொலைபெறுவாசல் ..... .... .. *
எண்சாணுடம்புமிழியும்பெருவழி ......... .... *
மண்பாற்காமங்கழிக்குமறைவிடம் ..... . . . *
நச்சிக்காமுகனுய்தானென்றும் ......... ...... *
இச்சித்திருக்குமிடைகழிவாசல் ......... ......... *
திங்கட்சடையோன்றிருவருளில்லார் ... ...... *
தங்கித்திரியுஞ்சவலைப்பெருவழி ....... ... ... *
புண்ணிதுவென்றுபுடைவையைமூடி .... ..... *
உண்ணீர்ப்பாயுமோசைச்செழும்புண் ... ..... *

பால்கொண்டொழியாமாந்தர்புகும்வழி...... ....*
நோய்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர்சாரும்படுங்குழி...... ... ......*
செருக்கியகாமுகர்சேருஞ்சிறுகுழி ... ...... ..*
பெண்ணுமாணும்பிறக்கும்பெருவழி .... ....*
மலஞ்சொரிந்திழியும்வாசற்கருகே.. ...........*
சலஞ்சொரிந்திழியும் தண்ணீர்வாசல்.. ... .....*
இத்தைதீங்களினிதெனவேண்டாம்... .... .....*
முத்திநாதனைமூவாமுதல்வனை... .......... .....*
பச்சிலையிடினும்பத்தர்க்கிரங்கி...... ..... ..........*
மெச்சிச்சிவபதவீடருள்பகவனை...... .......*
அண்டரண்டமுமனைத்துளபுவனமுங்..........*
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை ...... ... ..*
ஏகநாதனையிணையடியிறைஞ்சுமின் ..... .....*
போகமாத்தைப்போற்றுதலொழித்தே ....(௬)

நான்காவது-கச்சித்திருவகவல்
முற்றுப்பெற்றது.

சிவமயம்.

## திருவேகம்பமாலை.

அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்
லந், துறந்தானவனிற்சதகோடியுள்ளத்துறவு
டையோன், மறந்தானறக்கற்றறிவோடிருந்தி
ருவாதனையற், றிறந்தான் பெருமையை யென்
சொல்லுவேன்கச்சியேகம்பனே ... ..... .....(க)

கட்டியணைத்திடும்பெண்டிருமக்களுங்கால
த்தச்சன், வெட்டிமுறிக்கு மரம்போற்சரீரத்
தைவீழ்த்திவிட்டாற், கொட்டிமுழக்கியழுவார்
மயானங்குறுகியப்பா, லெட்டியடிவைப்பரோ
விறைவாகச்சியேகம்பனே ....... .........(உ)

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன் கை
யையெடுத், தப்புறந்தன்னி லசையாமன்முன்
வைத்தயல்வளவி, லொப்புடன்சென் றுதுயினீ
த்துப்பின்வந் துறங்குவளோ, யெப்படி நானம்
புவேனிறைவாகச்சியேகம்பனே ..... .... .....(ங)

நன்னாரிற்பூட்டியசூத்திரப்பாவை நன்னார்த
ப்பினாற்; றன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்
தன்மையைப்போ, லுன்னாலியானுந்திரிவதல்லா
ன்மற்றுனைப்பிரிந்தா, லென்னாலிங்காவ துண்
டோவிறைவாகச்சியேகம்பனே ..... .... .....(ச)

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமு ஞானமு
மே, யல்லாதுவேறு நிலையுளதோவகமும்பொ
ருளு, மில்லாளுஞ்சுற்றமுமைந்தரும் வாழ்வு

ஃ மறிவுடம்பு, மெல்லாவெளிமயக் கேயிறை வா கச்சியேகம்பனே ......... .... .... (ரு)

பொல்லாதவனெறி நில்லாதவனைம்புலன்க டமை, வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெய்ய டியவர்பாற், செல்லாதவனுண்மைசொல்லாதவ னின்றிருவடிக்கண், பில்லாதவன்மண்ணிலேன் பிறந்தேன்கச்சியேகம்பனே.... .... .... .... (சு)

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந் துமண்மேல்; இறக்கும்பொழுதுகொடுபோவதி ல்லையிடை நடுவிற், குறிக்குமிச்செல்வஞ்சிவன் றந்ததென்றுகொடுக்கறியா, திறக்குங்குலாம ருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. (எ)

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந் தாற், சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்று ணையைப், பன்னவிசாரம் பலகால்விசாரமிப் பாவிநெஞ்சுக், கென்னவிசாரம்வைத்தாயிறை வாகச்சியேகம்பனே ..... .... .... (அ)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங் கசிந்து ருகி, நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின் னஞ்செழுத்தைச், சொல்லாப்பிழையுந்துதியாப் பிழையுந்தொழாப்பிழையு,மெல்லாப்பிழையு ம்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே.... (கூ)

மாயநட்போரையுமாயாமலமெனு மாதரை யும், வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெ ய்யருளாந், தாயுடன்சென்றுபின் றாதையைக்

கூடிப்பின்றுயைமறந்; தேயும[illegible]ததிட்டையெ
ன்றுனெழிற்கச்சியேகம்பனே ........ ([illegible])

வரிக்கோலவேல்விழியாரனுராகமயக்கிற்செ
ன்று;சரிக்கோதும்வனெழுத்தஞ்சுஞ்சொலேன்
றமியேனுடல; நரிக்கோகழுகுபருந்தினுக்கோ
வெய்யநாய்தனக்கோ; வெரிக்கோவிரையெது
க்கோவிறைவாகச்சியேகம்பனே ..... .. (௰௧)

காதென்றுழக்கென்று கண்ணென்றுகாட்
டியென்கண்ணெதிரோ, மாதென்றுசொல்லிவ
ருமாயைதன்னை மறவிவிட்ட, தாதென்றெண்
ணுமற்சுகமென்று நாடுமித்துற்புத்தியை, யே
தென்றெடுத்தாைப்பேணிறைவாகச்சியேக• ()

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெ
ற்ற, பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளை
களுஞ், சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்லதேச
த்திலே,யாருஞ்சதமல்லநின்றாள் சதங்கச்சியே.

சீறும்வினையது பெண்ணுருவாகித் திரண்டு
ருண்டு;கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமை
யினுற்; பீறுமலமுமுதிரமுஞ்சாயும் பெருங்கு
ழிவிட், டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சி
யேகம்பனே ..... .... ............ ........ (௰௪)

பொருளுடையோரைச் செயலிலும்வீரரை
ப்போர்க்களத்துந், தெருளுடையோரை முகத்
தினுந்தேர்ந்துதெளிவதுபோ, லருளுடையோ
ரைத்தவத்திற்குணத்தி லருளிலன்பி, லிருளற

பொல்லினுங்கணத்ததுங்கச்சியேகம்பனே. ( )
பருத்திப்பொதியினைப் போலேவயிறுபருக்
கத்தங்க; டுருத்திக்கறுசுவைப்போடுகின்றார் து
றந்தோர்தமக்கு, வருத்தியமு திடமாட்டாரவ
ளாயிம்மாநிலத்தி, லிருத்திக்கொண்டேனிருத்
தாயிறைவாக்ச்சியேகம்பனே ....... .. .. (௰௬)
பொல்லாவிருளகற்றுங் கதிர்கூகையென்பு
ட்கண்ணினுக், கல்லாயிருந்திடுமாறொக்குமே
யறிவோருளத்தில், வல்லாரறிவா ரறியார்தமக்
குமயக்கங்கண்டா, யெல்லாம்விழிமயக்கேயி
றைவாகச்சியேகம்பனே ..... ....... ..........(௰௭)
வாதுக்குச்சண்டைக்குப்போவர்வருவர்வழ
க்குரைப்பர், தீதுக்குதவியுஞ்செய்திடுவார்தின
ந்தேடியொன்று, மாதுக்கழிந்து மயங்கிடுவா
ர்விதிமாளுமட்டு, மேதுக்கிவர்பிறந்தாரிறைவா
கச்சியேகம்பனே ... ..... ....... .... ... .. (௰௮)
ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்
பருற்றுப்பெற்ற, தாயாரைவைவர் சதியாயிர
ஞ்செய்வர்சாத்திரங்க, ளாயார்பிறர்க்குப காரஞ்
செய்யார்தமை யண்டினர்க்கொன், றீயாரி
ருந்தென்னபோயென்ன காண்கச்சியேகம். ( )
அப்பென்றும்வெண்மைய தாயினுமாங்கந்
நிலத்தியல்பாய்த், தப்பின்றியேகுண வேற்று
மைதான்பலசார்தலினாற், செப்பிலபக்குவம்ப
க்குவமாயுள்ளசீவனிலு, மிப்படியேநிற்ப னெ

ந்தைபிரான் கச்சியேகம்பனே ...... ...... (உ௱)
நாபாய்ப்பிறந்திடினல்லேட்டையாடி நடம் புரியுந்; தாயார்வயிற்றினரராய்ப்பிறந்துபின் கம்பனாராய்க்; காயாமரமும் வறளங்குளமுங்கல்லாவுமைன்ன, வீயாமனிதரை யேன்படைத்தாய்கச்சியேகம்பனே .... .... . ........ (உக)
ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னன்னைபெல்லாம், போற்றித்திருவுளம் பற்றுமையாபுரமூன்றெரித்துக், கூற்றைப்பணிகொளுந்தாளுடையா குன்றவில்லுடையா, யேற்றுக்கொடியுடையாயிறைவா கச்சியேகம்பனே உஉ
பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக், கண்ணால்வெருட்டி முலையான் மயக்கிக்கடிதடத்துப், புண்ணாங்குழியிடைத்தள்ளியென் போதப்பொருள்பறிக்க, வெண்ணாதுனைமறந்தேனிறைவா கச்சி யேகம்பனே (*)
நாவாரவேணவிதஞ்சொல்லுவாருனை நான் பிரித்தாற், சாவேனென்றேயிருந்தொக்கவுண்பார்கள் கைதான்வரண்டாற், போய்வாருமென்று நடுத்தலைக்கே குட்டிப்பூவையருக், கீவார்தலைவிதியோவிறைவா கச்சியேகம்பனே (உச)
கல்லார்சிவகதைநல்லோர் தமக்குக்கனவிலுமெய், சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார் குருசொன்னபடி; நில்லாரறத்தை நினையார் நின்னாமநினைவிற்சற்று, மில்லாரிருந்தென்னிற

ந தென்புகழ்க்கச்சியேகம்பனே.... ... ....(உரு)

வானமுதத்தின்சுவையறியாதவர்வண்கனியி
ன், றூனமுதத்தின்சுவை யெண்ணல்போலத்த
னித்தனியே, தேனமுதத்தின்றெளிவாய ஞான
ஞ் சிறிதுமில்லாக், கீனமுதச்சுவை நன்றவ்ல
வோகச்சியேகம்பனே.... ..... ........ ....(உசா)

ஊனத்தைச்சரீரத்தையாடாசக் கொட்டிலையு
ன்பொதிந்த, பீற்றற்றுருத்தியைச் சோறிடுந்
தோற்பையைப்பேசரிய, நாற்றிற் பொதிந்தநி
லையற்றபாண்டத்தைக்காதல்செய்தே; யேற்று
த்திரிந்துவிட்டே னிறைவாகச்சியேகம்பனே.

சொல்லால்வருங்குற்றஞ் சிந்தனையால்வருந்
தோடஞ்செய்த, பொல்லாததீவினை பார்வையி
ற்பாவங்கள் புண்ணியநா, லல்லாதகேள்வியை
க்கேட்டிடுந்தீங்குக ளாயவுமற், றெல்லாப்பி
ழையும் பொறுத்தருள்வாய் கச்சி யேகம்ப
னே...... ..... . ...... .... ... ... ..... ..... ....(உஅ)

முட்டற்றமஞ்சளையெண்ணெயிற் கூட்டிமு
கமினுக்கி, மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்த
ளையோலைவிளக்கியிட்டுப், பட்டப்பகலில் வெ
ளிமயக்கேசெயும்பாவையர்மே, லிட்டத்தைநீ
தவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே..... (உகூ)

பிறந்துமண்மீதிற்பிணியேகுடிகொண்டுபே
ரின்பத்தை, மறந்துசிற்றின்பத்தின் மேன்மய
லாகிப்புன்மாதருக்குப், பறந்துழன்றேதடுமா

ழிப்பொன் றேடியப்பாவையர்க்கீந், திறந்திடவோபணித்தாயிறைவாகச்சியேகம்பனே. (௯0)

பூதங்களற்றுப் பொறியற்றச்சாணம் புலன்களற்றுப், பேதங்குணமற்றுப்பேராசைதானற்றுப்பின்மு னற்றுச், சாதங்கரணங்க ளுமற்ற வானந்தக்காட்சியிலே, யேதங்களைந் திருப்பே னிறைவாகச்சியேகம்பனே ........ ........ (௯க)

நல்லாயெனக்கு மனுவொன்று தந்தருண் ஞானமிலாப்; பொல்லாவெனைக்கொன்றும்போமம்பொழுதியல் பூசைசெபஞ், சொல்லார்நற் றோயினிய மம்பலவகைத் தோத்திரமு, மெல்லாமுடிந்தபின் சொல்லுகண்டாய்கச்சியேகம்.

சட்கடத் துக்கிணைதேடிப்பலவுயிர்தன்னைக் கொன்று, விடக்கடித்துக்கொண்டிறுமாந்திருந்துமிகமெலிந்து; படக்கடித்தின் றுழல்வார்கடமைக்கரம்பற்றி நம, னிடக்கடிக்கும்பொழுதேதுசெய்வார்கச்சியேகம்பனே .. ... .... (௯௩)

நாறுமுடலைநரிப்போதுசோற்றினைநான்றினமுஞ், சோறுங்கறியுநிரப்பிய பாண்டத்தைத்தோகையர்தங், கூறுமலமு மிரத்தமுஞ்சோறுங்குழியில்விழா, தேறும்படியருள்வா யிறைவாகச்சியேகம்பனே ...................... (௯௪)

சொக்கிட்டரமனைப்புக்குட்டிருடியதுட்டர் வந்து, திக்குற்றமன்னரைக்கேட்பதுபோற்சிவ நிந்தைசெய்து, மிக்குக்குருலிங்க சங்கமநிந்தி

ந்துவிடிச்சிச்சு, மெக்குப்பெருத்தவர்க்கென்
சொல்லுவேன்கச்சியேகம்பனே ... ... ..... (௫௫)

விருந்தாகவந்தவர்தங்களுக்கன்னமிகக்கொ
டுக்கப், பொருந்தார்வளப்பெற வாழ்வார்நின்
றுமத்தைப்போற்றிநித்த, மருந்தாமுலைப்பட்டுங்
கொன்றாப்பாதகரம்புவியி, லிருந்தாவதேது
கண்டாயிறைவாகச்சியேகம்பனே .. ... (௫௬)

எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக் குள்
ளபடி, வல்லானறிந்துளவென் றுணராதுமதி
மயங்கிச், சொல்லான்மலைந்துறு சூழ்விதியின்
படிதுக்கித்துப்பி, னெல்லாஞ்சிவன்செயலே
யென்பர்காண்கச்சியேகம்பனே ...... ..... (௫௭)

பொன்னைநினைந்து வெகுவாகத்தேடுவர்பூ
வையன்று, டன்னைநினைந்துவெகுவாயுருகுவ
ர்தாரணியி; லுன்னைநினைந்திங் குனைப்பூசியாத
வுலுத்தரெல்லா, மென்னையிருந்து கண்டாயி
றைவாகச்சியேகம்பனே ... ......... ....... (௫௮)

கடுஞ்சொல்லின் வம்பரை யீனரைக்குண்ட
ரைக்காமுகரைக், கொடும்பவமேசெயுநிர்மூடர்
தம்மைக்குவலையத்து, நெடும்படைபோலவ
ளர்வதுநல்லோர்தநெறியறியா, விடும்பரையே
ன் தகுத்தாயிறைவாகச்சியேகம்பனே ... (௫௯)

கொன்றேனனேக முயிரையெல்லாம் பின்
புசொன்றுகொன்று; தின்றேனதன்றியுந்தீங்கு
செய்தேனது தீர்கவென்றே, நின்றேனின்சன்

னிதிச்செயதனுற்குற்றநீபொறுப்பா, யென்றே
புனைநம்பினேனிறைவாகச்சியேகம்பனே.(சக)

ஊரிருந்தென்ன நல்லோரிருந்தென் னுப
காரமுள்ள, பேரிருந்தென்பெற்ற தாயிருந்
தென் மடப்பெண்கொடியாள், சீரிருந்தென்
னற்சிறப்பிருந்தென்னவித்தையத்தினி, லேரி
ருந்தென்வல்லவாவிறைவாகச்சியேகம்பனே.

வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகு
ண்டொருவன், கல்லாலெறியப்பிரம்பாலடிக்
கக்களிவண்டுகூர்ந், தல்லார்பொழிற்றில்லையம்
பலவாணர்க்கோரன்னைபிதா, வில்லாததாலல்ல
வோவிறைவாகச்சியேகம்பனே......... ..(சஉ)

## விருத்தம்.

அன்னையெத்தனை யெத்தனையன்னை யோவ
ப்பனெத்தனையெத்தனையப்பனோ, பின்னையெ
த்தனை யெத்தனைபெண்டிரோ பிள்ளையெத்த
னை யெத்தனைபிள்ளையோ, முன்னையெத்தனை
யெத்தனைசென்மமோ மூடனாயடியேனுமறிந்
திலே,னின்னமெத்தனையெத்தனைசென்மமோ
யென்செய்வேன்கச்சியேகம்பநாதனே...(க)

## திருத்துல்லை.

காம்பிணங்குப்பணைத் தோளார்க்கும்பொ
ன்னுங்காசினிக்குந்,தாம்பிணங்கும்பலவாசை
யுப்விட்டுத்தனித்துச்செத்துட், போம்பிணந்
தன்னைத்திரளாகக்கூடிப்புரண்டினிமேற்,சாம்

பிணங்கத் தகுதியோ வென் செய்வேன் தில்லைச் சங்கரனே ..................... (௧)

சோறிடுநாடு துணிதருங்குப்பைத் தொண்டன்பனாக்கண், டேறிடுங்கைகளிறங்கிடுந் தீவினையெப்பொழுது, நீறிடுமேனியர் சிற்றம்பலவர் திருத்தங்கண்டா, லூறிடுங்கண் கலுழுகிடுநெஞ்சமென் னுள்ளமுமே.... ..... .... ........ (௨)

அழலுக்குள் வெண்ணெ யெனவேயுருகிப் பொன்னம்பலத்தார், நிழலுக்குணின்று தவமுஞற்றுமனிட்டேரமின்னர், குழலுக்கிசைந்த வகைமாலைகொண்டுகுற்றேவல்செய்து; விழலுக்குமுத்துலையிட்டிறைத்தேனென் விதிவசமே.

ஓடாமல்பாழுக்குழையாமலோர மூனாப்பவர்பாற், கூடாமனல்லவர்கூட்டம்விடாமல்வெங்கோபநெஞ்சில், நாடாமநன்மைவழுவாமலின்றைக்குநாளைக்கென்று, தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பரதேசிகனே..... ... ..... ... (௪)

பாராமலேற்பவர்க் கில்லையென்னுமற் பழுதுசொல்ல; வாராமற்பாவங்கள் வந்தணுகாமன்மனமயர்ந்து, பேராமற்சேர்வை பிரியாமலன்புபெறுதவனைச், சேராமற்செல்வந்தருவாய் சிதம்பரதேசிகனே .......................... (௫)

சொல்லாமற்கொன்றதைத்தின்னுமற்குத்திரங்சோள ளவு, கல்லாமற்கைதவரோடிணங்காமற்கனவினும்பொய், சொல்லாமற்சொற்களை

க்கேளாமற்றோகையர் மாயையிலே, செல்லாம
ற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே .... (௬)

முடிசார்ந்தமன்னரு மற்றுமுள்ளோருமு
டிவிலொரு, பிடிசாம்பராய்வெந்து மண்ணாவ
துங்கண்டுபின்னுமிந்தப், படிசார்ந்தவாழ்வை
நினைப்பதல்லாற்பொன்னினம்பலவ, ரடிசார்ந்
துநாமுய்யவேண்டுமென்றேயறிவாரில்லையே.

காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்சியி
ற். சாலவுபாதிபசிதாகமாகுமுற்சஞ்சிதமா; மா
லையுபாதிதுயில்காமமாமிவை மாற்றிவிட்டே,
பாலமுகந்தரு ளம்பலவாவென்னை யாண்டரு
ளே .............................................. (௮)

ஆயும்புகழ்த்தில்லையம்பலவாண ரருகிற்செ
ன்றாற், பாயுமிடபங்கடிக்குமரவம்பின் பற்றி
ச்சென்றாற். பேயுங்கணமும்பெருந்தலைப்பூத
மும்பின்றொடரும், போயென்செய்வாய்மன
மேபிணைக்காடவர்போமிடமே..... . .. .....(௯)

ஓடுமெடுத்ததளாடையுஞ்சுற்றி யுலாவிமெள்
ள; வீடுகடோறும்பலிவாங்கியேவிதி யற்றவர்
போ, லாடு மருட்கொண்டிங்கம்பலத்தே நிற்கு
மாண்டிதன்னைத், தேடுங்கணக்கென்ன காண்
சிவகாமசவுந்தரியே ........................................(௰)

ஊட்டுவிப்பானுமுறக்குவிப்பானுமிங்கொ
ன்றொடொன்றை, மூட்டுவிப்பானு முயங்கு
விப்பானுமுயன்றவினை, காட்டுவிப்பானு மிரு

வினைபாசக்கயிற்றின் வழி, யாட்டுவிப்பானுமொ
ருவனுண்டே தில்லையம்பலத்தே ..... ..... (௰௧)

அடியார்க்கெளியவரம்பலவாண ரடிபணித்
தால், மடியாமற்செல்வவரம்பெறலாம் வைய
மேழளந்த; நெடியோனும்வேதனுங் காணாதநி
த்தநிமலனருட், குடிகாணு நாங்க ளவர்காணு
மெங்கள்குலதெய்வமே ............... .... (௰௨)

தெய்வச்சிதம்பர தேவாவுன்சித்தந்திரும்பி
விட்டாற், பொய்வைத்தசொப்பனமாமன்ன
ராழ்வும்புவியுமெங்கே, மெய்வைத்தசெல்வ
மெங்கேமண்டலீகர்தம்மேடையெங்கே, கை
வைத்தநாடகசாலையெங்கேயிதுகண்மயக்கே.

உடுப்பானும்பாலனமுண்பானுமுய்வித்
தொருவர்தம்மைக், கெடுப்பானுமேதென்று
கேள்விசெய்வானுங்கெதியடங்கக், கொடுப்பா
னுந்தேசியென்றேற்பானுமேற்கக்கொடாமனி
ன்று, தடுப்பானுநீயல்லையோதில்லையானந்தத்
தாண்டவனே ..... ............. ......... ........ (௰௩)

வித்தாரம்பேசினுஞ்சோங்கேறினுங்கம்பமீ
திருந்து, தத்தாவென்றேறிப்பவுரிகொண்டா
டினுந்தம்முன்றம்பி, யொத்தாசைபேசினுமா
வதுண்டோதில்லையுண்ணிறைந்த, சத்தாவின்
சொற்படியல்லாதுவேறில்லை கன்மங்களே. ()

பிறவாதிருக்க வரந்தரல வேண்டும்பிறந்து
விட்டா, லிறவாதிருக்க மருந்துண்டுகாணிது

வெப்படியோ,வறமார்புகழ்த்தில்லையம்பலவா
ணரடிக்கமல, மறவாதிருமனமேயதுகாணென்
மருந்துனக்கே ... ......... ... .. ....... .....(௰௬)
தவியாதிருநெஞ்சமேதில்லைமேவிய சங்கர
னைப், புவியார்ந்திருக்கின்றஞானாகரனைப்புரா
ந்தகனை;யவியாவிளக்கைப்பொன்னம்பலத்தா
டிணையையந்தொழுத்தாற், செவியாமனீசெவித்
தாற்பிறவாமுத்திசித்திக்குமே ........ ....(௰௭)
நாவின்மறைப்பொருளம்பலவாணனை நம்
பியவர், பாலிலொருதரஞ்சேவிக்கொணாதிருப்
பார்க்கருங்கல்;மேவிலெடுத்தவர்கைவிலங்கை
த்தைப்பர்மீண்டுமொரு,காலினிறுத்துவர்கிட்
டியுந்தாம்வந்துகட்டுவரோ.......... ....(௰௮)
ஆற்றோடுதும்பையணிந்தாடுமம்பலவாணர்
தமைப், போற்றுதவர்க்கடையாளமுண்டேயி
ந்தப்பூதலத்திற், சோற்றுவியற்றுச் சுகமற்று
ச்சுற்றத் துணியுமற்றே, யேற்றலும்பிச்சைகி
டையாமலேகற்றிருப்பர்களே.... ..... .....(௰௯)
அத்தனைமுப்பத்துமுக்கோடி தேவர்க்கதிப
தியை, நித்தனையம்மைசிவகாமசுந்தரிநேசனை
யெங்,கத்தனைப்பொன்னம்பலத்தாடுமையனை
க்காணக்கண்க,ளெத்தனைகோடியுகமோதவஞ்
செய்திருக்கின்றவே....... ..... ........ , ...(௨௰)

## திருச்செங்காடு.

நெருப்பான மேனியர் செங்காட்டி லாத்தி

நிழலருகே, யிருப்பார் திருவுளமெப்படியோவி ன்னமென்னையன்னைக், கருப்பாசையக்குழிக் கேதள்ளுமோகண்ணனுங் காணரிய, திருப்பாத மேதருமோதெரியாதுசிவன் செயலே ......... *

## திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்செருகியறிவழிந் து, மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன் றுவேண்டுவன்யான், செய்யுந்திருவொற்றியூ ருடையீர்திருநீறுமிட்டுக், கையுந்தொழப்பண் ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே...... (௧)

சுடப்படுவாரறியார்புற மூன்றையுஞ்சுட்ட பிரான் றிடப்படுமாமதிற்றென்னொற்றியூரன் றெருப்பரப்பி, னடப்பவர்பொற்பத நந்தலை மேற்படநன்குருண்டு, கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக்கிழிப்பதுவே ... .... ...... (உ)

## திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்ன காறறேபுசித்தென்னக ந்தைசுற்றி, யோடேயெடுத்தென்ன வுள்ளன் பிலாதவரோங்குவிண்ணோர், நாடேயிடைமரு தீசர்க்குமெய்யன்பர் நாரியர்பால், வீடேயிரு ப்பினுமெய்ஞ்ஞானவீட்டின்பமேவுவரோ (௧)

தாயும்பகைகொண்ட பெண்டீர் பெரும்ப கைதன்னுடைய, சேயும்பகையுறவோரும்பகை யிச்செகமும்பகை, யாயும்பொழுதிலருஞ்செ ல்வநீங்கிலிங்காதலினாற், றேயுநெஞ்சேமருதீ

சர்பொற்பாதஞ்சுதந்தரமே ............ .. (உ)

## திருக்கழுக்குன்றம்.

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த, நாடோநகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த,வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல்வீழுமிட, நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணை நின்பதமே ...... ... . ......... . ............... ...... (க)

## திருக்காளத்தி.

பத்தும்புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடைசுற்றி, முத்தும்பவளமும்பூண்டோடியாடிமுடிந்தபின்பு,செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச் சாப்பிணங்கள், கத்துங்கணக்கென்னகாண்கயிலாபுரிக்காளத்தியே.......... (க)

பொன்னாற்பிரயோசனம்பொன்படைத்தார்க்குண்டு பொன்படைத்தோன், றன்னாற்பிரயோசனம்பொன்னுக்கங்கேதுண்டதன்மையைப்போ, லுன்னாற்பிரயோசனம் வேணதெல்லாமுண்மினைப்பணியு, மென்னாற் பிரயோசனமே தண்டுகாளத்தியீசுரனே ........ ..... (உ)

வாளான்மகவரிந்தூட்டவல்லேனல்லன்மாதுசொன்ன, சூளாலிளமை துறக்கவல்லேனல்லன்றொண்டுசெய்து, நாளாறிற் கண்ணிடந்தப்பவல்லேனல்லனானினிச்சென், றாளாவதெப்படியோதிருக்காளத்தியப்பருக்கே ..... .... (௩)

முப்போதுமன்னம்புசிக்கவுந்தூங்கவும்போ

கத்தினாற், செப்போதிளமுலையாருடன்சேரவுஞ்
சிவன்விடு, மப்போது கண்கலக்கப்படவுமமை
த்தாயையனே, யெப்போது காணவல்லேன் றி
ருக்காளத்தியீசுரனே... ... ... ... ... (௪)

இணைக்கேயிரவும்பகலுந்திரிந்திங் கிளைத்து
மின்னா, ரணைக்கேயவலக்குழியருகேயசுப்பா
ர்ந்தொழுகும், புணைக்கேயுழலுந்தமியேனையா
ண்டருள்பொன்முகலிக், கணைக்கேகல்லாலநிழ
ற்கீழமர்ந்தருள்காளத்தியே.... ........ ...(௫)

நாறுங்குருதிச்சலதாரைதோற்புனைநாடொ
றுஞ்சீ, யூறுமலக்குழிகாமத்துவாரமொளித்தி
டும்புண்; டேறுந்தசைப்பிளப்பந்தரங்கத்துள
சிற்றின்பம்விட், டேறும்பதந்தருவாய் திருக்
காளத்தியீசுரனே ... ......... .... ......... ....(௬)

## கைலாயம்.

கான்சாயும்வெள்ளிமலைக்கரசேநின் கழன
ம்பினேன்; ஞான்சாயுஞ்செம்மொழித்திடுவா
ய்கருஆணுக்காய்; மான்சாயச்செங்கை மழுவ
லஞ்சாயவணைந்தகொன்றைத், தேன்சாயநல்ல
திருமேனிசாய்த்தசிவக்கொழுந்தே..... ..(௧)

இல்லந்துறந்துபசிவந்தபோதங் கிரந்துதின்
று; பல்லுங்கறையறவெள்வாயுமாயொன்றிற்
பற்றுமின்றிச், சொல்லும்பொருளுமிழந்து
சுகானந்தத்தூக்கத்திலே; யல்லும்பகலுமிருப்
பதென்றோகயிலாயத்தனே.. .......... ..... (௨)

சினந்தனையற்றுப்பிரியமுந்தானற்றுச் செ
ய்கையற்று, நினைந்ததுமற்று நினையாமையுமற்
று நிர்ச்சிந்தனைய்த்; தனந்தனியேயிருந்தானந்
தநித்திரா தங்குகின்ற, வனந்தனிலென்றிருப்
பேணத்தனேகயிலாயத்தனே ............... (௩)

கையாரவேற்றுநின் றங்ஙனந்தின் றுகரித்து
ணியைத், தையாதுடுத்துநின் சன்னிதிக்கேவ
ந்துசந்ததமு, மெய்யாரநிற்பணிந் துள்ளேயு
ரோமம்விதிர்விதிர்ப்ப; வையாவென்றோலமிடு
வதென்றோகயிலாயத்தனே ............ (௪)

நீறார்த்தமேனியுரோமஞ்சிலிர்த்துளநெக்
குநெக்குச், சேறாய்க்கசிந்துகசிந்தேயுருகிநின்
சீரடிக்கே, மாறாத்தியானமுற் றானந்த மேற்
கொண்டுமார்பிற்கண்ணீ, ராறாய்ப்பெருகச்சி
டப்பதென்றோகயிலாயத்தனே ..... ..... (௫)

செல்வரைப்பின்சென் றுசங்கடம்பேசித்தி
னந்தினமும், பல்வினைக்காட்டிப் பரதவியாம
ற்பரானந்தத்தி, னெல்லையிற்புக்கிடவேகாந்த
மாயெனக்காமிடத்தே, யல்லலற்றென்றிருப்
பேணத்தனேகயிலாயத்தனே .. .. .......... (௬)

மந்திக்குருளையொத்தேனில்லைநாயேன்வழக்
கறிந்துஞ், சிந்திக்குஞ்சிந்தையையாளென்செ
ய்வேனனைத்தீதகற்றிப், புந்திப்பரிவிற்குரு
ளையையேந்தியபூசையைப்போ, லெந்தைக்கு
ரியவன்காணத்தனேகயிலாயத்தனே ..... .. (௭)

வருந்தேன்பிறந் துமிறந்துமயக்கும்புலன் வழிபோய்ப்;பொருந்தேனரகிற்புகுகின்றிலே ன்புகழ்வாரிடத்தி,விருந்தேனினியவர்கூட்டம் விடேனியலஞ்செழுத்தா, மருந்தேனருந்துவ னின்னருளாற்கயிலாயத்தனே ..... .... ... (அ)

மதுரை.

விடப்படுமோவிப்பிரபஞ்சவாழ்க்கையைவி ட்டுமனந்; திடப்படுமோநின்னருளின்றியேதி னமேயலையக், கடப்படுமோவற்பர்வாசலிற்செ ன்றுகண்ணீர்த்ததும்பிப், படப்படுமோசொ க்கநாதாசவுந்தரபாண்டியனே ........ ... ... (க)

பொது.

உடைகோவணமுண்டுறங்கப்புறந்திண்ணை யுண்டுணவிங்; கடைகாயிலையுண் டருந்தத்தண் ணீருண்டருந்துணைக்கே,விடையேறுமீசர்திரு நாமமுண்டிந்தமேதினியில், வடகோடுயர்ந் தென்னதென்கோடுசாய்ந்தென்னவான்பிறை க்கே .... .... ........ ........ ........ ........ ........ .. (க)

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த; வோடுநமக்குண்டுவற்றாதபாத்திரமோங்குசெ ல்வ, நாடுநமக்குண்டுகேட்டதெல்லாந்தர நன் னெஞ்சமே, யீடுநமக்குச்சொலவே யொருவ ருமிங்கிலையே . .......... .... .... ...... .... .. (உ)

நாடிக்கொண்டிசைநாட்ட முற்றுமிலை நா தரடி,தேடிக்கொண்டாடித்தெளிந்தாயிலைசெ

கமாலையவந்து, மூடிக்கொண்டோமென்றுங்
காமாயுதங்கண்முனிந்தவென்றும்: பீடிப்பை
யோநெஞ்சமேயுனைப்போலிலைப்பித்தர்களே.

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக்க
ருத்தொன்றெண்ணப், பொய்யொன்றுவஞ்ச
கநாவொன்றுபேசப்புலால்கமழு. மெய்யொ
ன்றுசாரச்செவியொன்றுகேட்கவிரும்புமியா
ன், செய்கின்றபூசைவெவ்வாறுகொள்வாய்வி
னைதீர்த்தவனே ........ .... ............. (௪)

கண்ணுண்டுகாணக்கருத்துண்டுநோக்கக்க
திந்திருக்கப்; பண்ணுண்டுபாடச் செவியுண்டு
கேட்கப்பல்பச்சிலையா; லெண்ணுண்டு சாத்த
வெதிர்நிற்கவீசனிருக்கையிலே; மண்ணுண்டு
போகுதையோகெடுவீரிந்தமானிடமே (௫)

சொல்லிலுஞ்சொல்லின்முடிவிலும்வேதச்
சுருதியிலு; மல்லினிமாசற்றவாகாயந்தன்னிலு
மாய்ந்துவிட்டோ, ரில்லிலுமன்பரிடத்திலுமீ
சனிருக்குமிடங், கல்லிலுஞ் செம்பிலுமோவி
ருப்பானெங்கள்கண்ணுதலே.. ....... ....(௬)

வினைப்போகமேயொருதேகங் கண்டாய்வி
னைதானொழிந்தாற், றினைப்போதளவுநில்லாது
கண்டாய்சிவன்பாதநினை. நினைப்போனாமேவு
நினையாமைநீங்கின் னெறியினின்று, னுனைப்
போலொருவருண்டோ மனமேயெனக்குற்ற
வரே ................................ (௭)

பட்டைக்கிழித்துப்பரிவுசிதலைட்பரிந்தெ
டுத்து, முட்டச்சுருட்டியென்மொய்குழலாள்
கையின்முன்கொடுத்துக், கட்டியிருந்தகனமா
பக்காரிதன்காமமெல்லாம்; விட்டுப்பிரியமென்
றேலிங்கனேசிவன்மீண்டதுவே ..... ....(௮)

சூதற்றகொங்கையு மாளுர்கலவியுஞ் சூழ்
பொருளும், போதற்றபூசலுக் கென்செடலா
ஞ்செய்தபுண்ணியத்தாற், றீதற்ற மன்னவன்
சிந்தையினின்று தெளிவதற்கோ, காதற்றவூசி
யைத்தந்துவிட்டானென் றன்கைதனிலே. (௯)

வாதுற்றதிண்புயரண்ணாமலையர்மலர்ப்பதத்
தைப், போதற்றப்போதும் புகலுநெஞ்சேயி
ந்தப்பூதலத்திற், றீதுற்றசெல்வமென்றேடிப்
புதைத்ததிரவியமென், காதற்றவூசியும்வாராது
காணுங்கடைவழிக்கே..... .... .... ... .. .... (௰)

வேதத்தினுட்பொருண் மண்ணாசைமங்கை
யைவிட்டுவிடப், போதித்தவன்மொழிகேட்டி
லேயோசெய்தபுண்ணியத்தா, லாதித்தன்சந்தி
ரன்போலேவெளிச்சமதாம்பொழுது, காதற்
றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. (௰௧)

மனையாளுமக்களும் வாழ்வுந்தன முந்தன்
வாசன்மட்டே, யினமானசுற்றமயானமட்டே
வழிக்கேதுதுணை, தினையாமளவெள்ளளவாகி
னுமுன்புசெய்ததவந், தனையாளவென்றும்பர
லோகஞ்சித்திக்குஞ்சத்தியமே..... .......(௰௨)

அத்தமும்வாழ்வு மகத்து மட்டேவிழியம்
பொழுக, மெத்தியமாதரும்வீதிமட்டே விம்
மிவிம்மியிரு;கைத்தலைமேல்வைத்தழுமைந்த
ருஞ்சுடுகாடுமட்டே. பற்றித்தொடரு மிருவி
னைப்புண்ணியபாவமுமே .... ........... ...(௰௩)

சீயுங்குருதிச்செழு நீர்வழும்புஞ்செறித்தெ
ழுந்து, பாயும்புடைவையொன் றில்லாதபோது
பகலிரவா, யீயுமெறும்பும்புகுகின் றயோனிக்
கிரவுபகன். மாயுமனிதனை மாயாமல்வைக்கம
ருந்தில்லையே ....... ................ ..... .... (௰௪)

சீதப்பனிக்குண்டுசிக்கெனக்கந்தை தினமிர
ந்து,நீதுய்க்கச்சோறுமனைதோறு முண்டுநினை
வெழுந்தால்;வீதிக்குநல்லவிலைமாதருண்டிந்த
மேதினியி, லேதுக்குநீசலித்தாய் மனமேயெ
ன்றுப்புண்பட்டே .... .............. ....... ....(௰௫)

ஆறுண்டு தோப்புண்டணிவீதி யம்பலந்தா
னுமுண்டு, நீறுண்டுகந்தைநெடுங்கோவணமு
ண்டுநித்தநித்த; மாறுண்டலாவிமயங்குநெஞ்
சேமனைதோறுஞ்சென்று, சோறுண்டுதூங்கிப்
பின்சும் மாவிருக்கச்சுகமுமுண்டே..... ௰௬)

உடுக் கக்கவிக்கக்குளிர்காற்றுவெய்யிலொடு
ங்கிவந்தாற், றடுக் கப்பழயவொருவேட்டியுண்
டுசகமுழுதும். படுக்கப்புறந்திண்ணையெங்கெ
ங்குமுண்டுபசித்துவந்தாற். கொடுக்கச்சிவனு
ண்டுநெஞ்சேநமக்குக்குறைவில்லையே.. (௰௭)

மாடுண்டுகன் றுண்டுமக்களுண்டென் றுமகி
ழ்வதெல்லாம்; கேடுண்டெனும்படிகேட்டுவிட்
டோமினிக் கேண்மனமே யோடுண்டுகந்தையு
ண்டுள்ளே யெழுத்தைந் துமோதவுண்டு, தோடு
ண்டகண்டனடியார் நமக்குத்துணையுமுண்டே.
மாத்தானவத்தையும்மாடாபுரியின் மயக்க
த்தையும், நீத்தார் தமக்கொரு நிட்டையுண்
டோநித்தனன்புகொண்டு, வேர்த்தாற்குளித்து
ப்பசித்தாற்புசித்துவிழித்துயின் று, பார்த்தாலு
லகத்தவர்போலிருப்பர்பற்றற்றவரே. ...(௰௯)
ஒன்றென் றிருதெய்வமுண்டென் றிருவுயர்
செல்வமெல்லா, மன்றென் றிருபசித்தோர்மு
கம்பார்நல்லறமுநட்பு, நன்றென் றிருநடுநீங்
காமலேநமக்கிட்டபடி, யென்றென் றிருமன
மேயுனக்கேவுபதேசமிதே............ (௨௰)
நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தைநம்
புபொம்ம, லாட்டமென்றேயிருபொல்லாவுட
லைபடர்ந்தசந்தைக், கூட்டமென்றேயிரு சுற்
றத்தைவாழ்வைக்குடங்கவழ்நீ, ரோட்டமென்
றேயிருநெஞ்சேயுனக்குபதேசமிதே...(௨௧)
என்செயலாவதியாதொன் றுமில்லை யினித்
தெய்வமே; யுன்செயலேயென் றுணரப் பெற்
றேனிந்த வூனெடுத்த, பின்செய்த தீவினையா
தொன் றுமில்லைப் பிறப்பதற்கு; முன்செய்ததீ
வினையோவிங்ஙனேவந்துமீண்டதுவே. (௨௨)

திருவேடமாகித்தெருவிற்டயின் றனைத்தே
டிவந்து, பரிவாகப்பிச்சைபகருமென் றுனைப்
பதம்பணிந்தேன், கருவாகுமேதக்கடற் கரை
மேவக்கருதுமென்னை, யுருவாக்கிக்கொள்ளவ
ல்லோவிங்ஙனேசிவனுற்றதுவே ... ..... (௨௩)

விட்டேனுலகம்விரும்பேனிருவினை வீணரு
டன், கிட்டேனருணா சேட்டுமிரோன்மெய்கெ
டாதநிலை,தொட்டேன் சுகதுக்கமற்றுவிட்டே
ன்றொல்லை நான்மறைக்கு, மெட்டேனெனும்
பரமென்னிடத்தேவந்திங் கெய்தியதே.(௨௪)

அட்டாங்கயோகமுமாதாரமாறு மவத்தை
யைந்தும்; விட்டேறிப்போன வெளிதனிலே
வியப்பொன்று கண்டேன், வட்டாகிச்செம்மதி
ப்பாலூறலுண்டுமகிழ்ந்திருக்க,வெட்டாதபே
ரின்பமென்னைவிழுங்கியிருக்கின்றதே. (௨௫)

எரியெனக்கென்னும்புழுவோவெனக்கெனு
மிந்தமண்ணுஞ், சரியெனக்கென்னும் பருந்
தோவெனக்கெனுந் தான்புசிக்க, நரியெனக்
கென்னும்புன்னாயெனக்கெனுமிந்நாறுடலை
ப்,பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்னபே
றெனக்கே...... ... ..... ... .... .......... (௨௬)

அண்ணறன்வீதியரசிருட்பாகு மணிபவட
யோர், நண்ணொரு நாலொன்ப தாமவரோவலு
தண்ணுமிவ்வூர், துண்ணெண்டசிக்குமடப்ப
ள்ளியானசுகமுமெல்லா, மெண்ணிலிகால ம

வமேவிடுத்தன் மெண்ணரிதே ..........(௨௭)
என்பெற்றதாயருமென்னைப் பிணமென்றிக
ழ்ந்துவிட்டார், பொன்பெற்றமாதரும் போ
வென்றுசொல்லிப்புலம்பிவிட்டார், கொன்பெ
ற்ற மைந்தரும்பின்வலம்வந்து குடமுடைத்
தா. ருன்பற்றொழியவொருபற்றுமில்லையுடை
யவனே .... ......................... ..............(௨௮)

கறையற்றபல்லுங்கரித்துணியாடையுங் கள்
ளமின்றிப், பொறையுற்றநெஞ்சமும்பொல்
லாதவூணும்புறந்திண்ணையுந், தரையிற்கிடப்
புமிரந்துண்ணுமோடுஞ்சகமறியக், குறைவற்
றசெல்வமென்றே கோலமாமறைக் கூப்பிடு
மே .. .... ........ ... ................... ..........(௨௯)

எட்டுத்திசையும்பதினாறுகோணமுமெங்கு
மொன்றாய், முட்டித்ததும்பிமுளைத்தோங்கு
சோதியைமூடரெல்லாங், கட்டிச்சுருட்டித்தங்
கக்கத்தில் வைப்பர் கருத்திலையார், பட்ட
ப்பகலையிரவென்றுகூறிடும்பாதகரே ...(௩௰)

வாய்நாறுமூழன்மயிர்ச்சிக்குநாறிடுமையிடு
ங்கண், பீநாறுமங்கம்பிணவெடிநாறும்பெரு
ங்குழிவாய்ச்; சீநாறும்யோனியழுநாறு மீந்தி
யச்சேறுசிந்திப், பாய்நாறுமங்கையர்க் கோவி
ங்ஙனேமனம்பற்றியதே ........ .. ..........(௩௧)

உளாக்கைக்கு நல்லதிரு வெழுத்தைந் தண்
டுளாப்படியே. செருக்கித்தரிக்கத்திருநீறுமு

ண்டுதெருக் குப்பையிற், றரிக்கக்கரித் துணியா
டையுமுண் டெந்தச்சாதியிலு, மிரக்கத் துணிந்
து கொண்டேன்குறைவேதுமெனக்கில்லையே
ஏதப்பட்டாயினிமேற் படும்பாட்டையியெ
ன்றறிந்து,போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்
சென்றுபுல்லறிவால்,வாதைப்பட்டாய்மடமா
ஞர்கலவிமயக்கத்திலே; பேதைப்பட்டாய்நெ
ஞ்சமேயுனைப்போலில்லைப்பித்தருமே (௫௩)

சுரப்பற்று வல்வினைசுற்றமுமற்றுத் தொழி
ல்களற்றுக், கரப்பற்றுமங்கையர் கையிணக்கற்
றுக்கவலையற்று, வரப்பற்று நாதனை வாயாரவா
ழ்த்திமனமடங்கப், பரப்பற்றிருப்பதன்றோ ப
ரமாபரமானந்தமே............ ........ (௫௪)

பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்
டபிச்சையெல்லா, நாய்போலருந்திநரிபோலு
ழன்று நன்மங்கையரைத், தாய்போற்கருதித்த
மர்போலனைவர்க்குந்தாழ்மைசொல்லிச், சேய்
போலிருப்பர்கண்டீ ருண்மைஞானந் தெளி
ந்தவரே ............ .... .... ........ ...... (௫௫)

விடக்கேடருந்தின்விருந்தேகமண்டலவிணை
ணிட்ட, முடக்கேபுழுவந்துறை யிடமேநலமு
ற்றமிலாச், சடக்கேகருவி தளர்ந்து விட்டாற்
பெற்றதாயுந்தொடாத்; தொடக்கேயுனைச்சும
ந்தேனின்னினேதுசுகமெனக்கே..... .... (௫௬)

அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்

ணவாவதில்லை தொழுதார்ப்பவினென்ன நின்னை
யொருவர்சுடவுணாத்த, டழுதாற் யினென்ன ந
ன்மையுந்தீமையும்பங்கை யத் தா, னெவு தா
பபடிவருமோ சலியாதுமொன் னெழ நெஞ்
சே.... ................................ (௧௭)

ஊளீருமக்கோருபதேசஞ்சேளு மூடம்பட
ங்கட், பாரீர்சமணைக் கழுவேற்று நீற்றறைப்பு
றத்திண்ணையிற், சாரீரளந்தலைச் சுற்றத்தைநீ
ங்கிச்சுக நகைக்க, வேரிருமக்கவர்தானே தருவ
ரிணையடிக்கே... ........................ (௧௮)

நீற்றிற்பிறந்தென்ன நீராழம்போயென்ன
நீமனமே, மாற்றப்பிறக்கவகையறிந்தாயில்லை
மாமறைநூ, லேற்றிக்கிடக்குமெழுகோடிமந்
திரமென்னகண்டா, யாற்றிற்கிடந்து துறைய
றியாமலலைகின்றயே.... .................... (௧௯)

ஓங்காரமாய்நின் றவத்துவிலேயொரு வித்
துவந்து, பாங்காமுளைத்த பயனறிந்தாறடதி
ஞுலகு, நீங்காமநீங்கி நிறையாநிறைந்து நி
றையுருவா, யாங்காரமானவர்கசெட்டாக்கனி
வந்தமர்ந்திடுமே........ .... ........... (௨௰)

விதியார்படைப்புமரியாரளிப்பும்வியன்கயி
லைப், பதியார்தொடைப்பு நம்பா லணுகாதுப
ரானந்தமே, கதியாகக்கொண்டுமற்றெல்லாந்
துயிலிற்கன வெனநீ; மதியாதிருமனமே யிது
காணன்மருந்துனக்கே...... .................. (௨௧)

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நடைமனையெல்ல, வாய்க்குண்டு மந்திர பஞ்சாட்சரமதியாமல் வரும், பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்றனவிப் பிணி. நோய்க்குண்டு தேவி என்றன்ன நுணுக்கங்கணுக்கு தற்கே. (சஉ)

நேமங்க நிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி, யோமங்கடர்ப்பணஞ்சந்தி செபமந்த்ரயோக நிலை, நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே. சாமங்கடோறுமிவர் செய்யும் பூசைகள் சர்ப்பனையே.......... .. ..... ... .....(சஙு)

நானெத்தனை புத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே, யேனிப்படி கேட்டுழலுகின்றா யினியேதுமிலா, வானத்தின் மீனுக்கு வன்றூண்டிலிட்ட வகையது போற், போனத்தை மீளநினைக்கின்றனை யென்ன புத்தியிதே....(சச)

அஞ்சக்கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும், வஞ்சப்புலக் கட்டை வேரறவெட்டி வளங்கள் செய்து, விஞ்சத் திருத்திச் சதாசிவமென்கின்ற வித்தையிட்டுப், புன் செய்க்களை பறித்தேன் வளர்த்தேன் சிவ போகத்தையே. சரு

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடநா, ணீயாரு நானுமொனைப்பகர்வாரந்த நேரத்திலே; நோயாரும் வந்து குடிகொள்வரோ கொண்ட நோயுமொரு, பாயாரு நீயுமல்லாற் பின்னையேது தட்பாருடலே... .....(சசு)

ஆயும்பொழுது மயிர்க்கால் கடோறுமருங்
கிருமி தோயுமலக்குட்டையாகிய சாயத்தைச்
சுட்டுவிட்டாற், பேயுநடனமிடுங் கடமாமெ
ன்றுபேசுவதை. நீயுமறிந்திலையோ பொருட்
டேட்டநினைந்தனையே ......... (௪௭)

பூணும்பணிக்கல்லபொன்னுக்குத்தானல்ல
பூமிதனைக், காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்
லநற்காட்சிக்கல்ல, சேணுஞ்சடந்த சிவனடிக்கு
ல்லவென்சிந்தைகெட்டு, சாணும்வளர்க்க வடி
யேன்படுந்துயர்சற்றலவே ...... (௪௮)

வெட்டாதசக்கரம்பேசாதமந்திரம்வேறொ
ருவர்க், கெட்டாதபுட்பமிறையாததீர்த்தமினி
முடிந்து, கட்டாதலிங்கஞ்சங்கருதாதநெஞ்சங்க
ருத்தினுள்ளே, முட்டாதபூசையன்றோகுருநா
தன்மொழிந்ததுவே ...... (௪௯)

எருமுட்டைபிட்கி னுதிர்ந்திடுஞ் செல்லுக்
கெவரழுவார், கருமுட்டைபுசகுச கழலகன்று
ய்கன துக்கமதாய்ப்; பெருமுட்டுப் பட்டவர்
போலழும்பேதையிர்பேத்துகிறீ; ரொருமுட்
டும்விட்டுமரணமமென்றைக்குமோதுமினே.

மையாடுகண்ணியுமைந்தரும்வாழ்வு மனையு
ஞ்செந்தீ, வையாதின்மாயையுருவெளிதோ
ற்றமகிலத்துள்ளே, மெய்யாயிருந்தது நாட்
செலநாட்செலவெட்டவெறும், பொய்யாய்ப்
பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போன

துவே........................(௫௧)

ஆயாய்ப்பலகலையாய்ந்திடுந் தூய வருந்தவர் பாற், போயாகிலு முண்மையைத் தெரிந்தாயில்லை பூகலத்தில், வேயார்ந்த தோளியர்காமவிகாரத்தில்விழ்ந்தழுந்திப், பேயாய்விழிக்கின்றனைமனமேயென்னபித்துனக்கே.. ..(௫௨)

அடியாருறவுமரன்பூசைநேசமு மன்புமின்றிப், படிமீதில்வேறுபயனுளதோ பங்கயன்வகுத்த, குடியானசுற்றமுந்தாரமும்வாழ்வுந்துசக்கலங்கள், தடிபாலடியுண்ட வாறெருக்குமென்றினஞ்சார்ந்திலரோ ...... .... ...(௫௩)

ஆங்காரப் பொக்கிஷங்கோபக் களஞ்சியமாணவந்தா; னீங்காவரணமனை பொய்வைத்தகூடம்வின்னணீடிவளர், தேங்கார்பெருந்திற்காமவிலாசமித்தேகங்கந்தல்- பாங்காயுனைப்பணிந்தெப்படிஞானம்பலிப்பதுவே ......(௫௪)

ஒழிபாப்பிறவிபெருத்தேங்கியேங்கியுழன்றநெஞ்சே. யழிபாப்பதவிக்கவுடதங்கேட்டியறுதியனை மழுமான் கரத்தனை மால்விடையானைமனத்திலுன்னி - விழிபாற்புனல்சிந்திவிம்மிபழுநன்மைவேண்டுமென்றே.... ........ .(௫௫)

நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவ நாட்டிலுண்டோ - பேய்க்கொருஞானம்பிடியடுமோ பெருங்காஞ்சிரங்கா-யாக துவராரதருந்துவராரது போலுடம்பு - தீக்கிரையாவதல்லா

லேதுக்காமிணைச்செப்புமினே............ (௫௬)

சச்சிற்கிடக்குங்கனதனத்திற்கடைக்கண்கள்
பட்டே - யிச்சித்திரக்கின்றவேழைநெஞ்சேயி
ரவான்பயந்த - பச்சைப்பசுங்கொடி யுண்ணா
முலைபங்கர்பாதத்திலே - தைச்சுகிடமனமே
யொருகாலுந்தவறில்லையே ..... (௫௭)

மானார்விற்றிலைபக்கடந்தேறிவந்தனன்வாழ்
குறவுங் - கோனாகியென்னைக்குடியேற்றிக்கொ
ண்டனன் குற்றமில்லை - போனாலும் பேரிருந்
தாலுநற்பேரிதுபொய்யன்றுகா - னானாலுமிந்
தவுடம்போடிருப்பதருவருப்பே .... (௫௮)

சற்றாகிலுந்தன்னைத் தானறியாய் தனையாய்
ந்தவனை - யுற்றாகிலுமணைக்கப்பொருந்தாயுன
க்கானநிலை - பற்றாய்குருவைப்பணியாய் பரத்
தையர்பாலிற்சென்றேன் - பெற்றாய்மடநெஞ்
சமேயுனைப்போலில்லைபித்தனுமே ..... (௫௯)

உளியிட்டகல்லையுமொப்புட்டசாந்தையுமூ
த்தையறப் - புளியிட்டசெம்பையும் போற்று
கிலேனுயர்பொன்னெனவே - யொளியிட்டதா
ளிரண்டுள்ளே யிருத்துவ தன்மை யென்று
வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்
றும்வேண்டிலனே .... (௬௰)

கல்லாவெறியுண்டுங் காலானுதையுண்டுங்
காளைகையில் - வில்லாலடியுண்டு முன்னாள்விட
முண்டு மேலளித்துப் - பல்லாற்புரமெரியேக
ம்பவரணர்பதாம்புயத்தின் - சொல்லாசெவியி

விற்கேளா திருந்ததென் றெல்வினையே. (சுக)

ஒருநான்கு சாதிக்கு மூவகைத்தேவர்க்குமு ம்பருக்குந், திருநாளுந் தீர்த்தமும் வேறுளதோவத்துவைசமுகனுல்-வருநாளில்வந்திடுமார் தக்கண் ணுளன் வகுப்பொழியக் - குருநாதா னைகண்டீர்பின்னையேதக்குவலையத்தே (சுஉ)

விருத்தம்.

பாரோ நீரோ தீயோவளியோ படர்வானோ .... *
ஆரோ நானென் றுய்வுறுகின்றேன றிவில்லேன்
பாரோ நீரோ தீயோவளியோ படர்வானோ .... *
ஆரோ நானென றுய்வுறுகின் றவதுநீயே (சுங)

தாப்பிளைக்கப்பொய்புரைத்து தன்னிதியந் தேடி- நலமொன்றுமறியாத நாரியரைக்கூடிப்- பூப்பிளைக்கவருமேழைப்புற்றீசல்போலப் புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்-காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்-கவட்டுத்தோல்மாத்துளையிற் காலுழைத்துக்கொண்டீர்- ஆப்பதனையசைத்துவிட்டக் குரங்கதனைப்போல, வகப்பட்டீர்கிடந்துழலவகப்பட்டீரே .... .... .... .. .... .... .... .... (சுச)

மற்றனைத்தயிருண்பானுமலர்மிசையேகினுனுந், நிற்றவுந் தேடிக்காணு நிமலனே நீயின் றேகி, செற்றனைத்திருநான் கூரிற்சேத்தனைவேந்தநிட்ட,கைற்றனை நீக்கியென்முன் காட்டியென் காட்டினானே..... ..... ..... .... .... .... (சுரு)

முற்றிற்று.

**பட்டணத்தார்**

**தாயார்க்குத் தகனகிரியை செய்கையிற்பாடிய**

**வெண்பா.**

---

ஐயிரண்டுதிங்களாயங்கமெலா நொந்துபெ
ற்றுப், பையலென்றபோதேபரிந்தெடுத்துச்-
செய்யவிரு, கைப்புறத்திலேந்திக்கனகமுலை த
ந்தாளை, யெப்பிறப்பிற்காண்பேனினி .....(க)

முந்தித்தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்
தே, யந்திபகலாச்சிவனையாதரித்துத்-தொந்தி,
சரியச்சுமந்துபெற்றதாயார்தமக்கோ..... .. *
வெரியத்தணன்மூட்டுவேன் ........ ..... .... ... (உ)

வட்டிலிலுந்தொட்டிலிலு மார்மேலுந்தோ
ண்மேலுங், கட்டிலிலும்வைத்தென்னைக் காத
லித்து- முட்டச், சிறகிலிட்டுக்காப்பாற்றிச்சீ
ராட்டுந்தாய்க்கோ, விறகிலிட்டுத் தீமூட்டுவே
ன் ... ... ........ .... ..... ......... ......... ..... (௩)

நொந்துசுமந்துபெற்று நோவாமலேந்தி
முலை, தந்துவளர்த்தெடுத்துத்தாழாமே- யந்தி
பகல், கையிலேகொண்டென்னைக் காப்பாற்று
ந்தாய்தனக்கோ, மெய்யிலேதீமூட்டுவேன். )

அரிசியோநானிடுவேனாத்தாடனக்கு ...... *
வரிசையிட்டுப்பார்த்துமகிழாமல்- லுருகியுள்ள,
தேனேயமிர்தமேசெல்வத்திரவியபு ......... ... *
மானேயெனவழைத்தவாய்க்கு........., ...(ரு)

அள்ளியிடுவதரிசியோ தாய்தலைமேற்... ... *

கொள்ளிதனை வைப்பேனோகூசாமல்-மெள்ள,
மூகமேன்முகம்வைத்துமுத்தாடியென்றன் *
மகனேயெனவழைத்தவாய்க்கு .. ..... .... (௬)

விருத்தம்.

முன்னையிட்டதீமுப்புரத்திலே .... ... *
பின்னையிட்டதீதென்னிலங்கையி ...... *
லன்னையிட்டதீயடிவயிற்றிலே .... *
யானுமிட்டதீமூள்கமூள்கவே ...... (௭)

வெண்பா.

வேகுதேதீயதனில்வெந்துபொடிசாம்ப ... *
லாகுதேபாவியேனையோகோ - மாகக் ...... *
குருவிபரவாமற்கோதாட்டியென்னைச் .... *
கருதிவளர்த்தெடுத்ததை ...... .... .... ..... (௮)
வெந்தாளோசோணகிரிவித்தகா நின்பதத்தில் *
வந்தாளோவென்னைமறந்தாளோ - சந்ததமு *
முன்னையேநோக்கியுகந்துவரங்கிடந்தேன் *
றன்னையேயீன்றெடுத்ததாய் ..... .......... .... (௯)
வீற்றிருந்தாளன்னை வீதிதனிலிருந்தாள் ... *
நேற்றிருந்தாளின்றுவெந்துநீறானாள்-பாற்றெ
ளிக்க,வெல்லீரும்வாருங்களேதென்றிரங்காம,
லெல்லாஞ்சிவமயமேயாம் ... .......... ........ (௰)

வெளிப்பட்டபின்பாடியது.

மென்றுவிழுங்கிவிடாய்கழிக்கநீர்தேட ...... *
லென்றுவிடியுமெனக்கென்கோவே - நன்றி,
கருதார்புரமூன்றுங்கட்டழலாற்செற்ற. ..... *

மருகாவுன் சன்னிதிக்கே வந்து ......... .....(௰௧)

சிற்றம்பலமுஞ்சிவனுமருகிருக்க ... .... .... *
வெற்றம்பலந்தேடிவிட்டோமே- நித்தம் *
பிறந்திடத்தைத் தேடுதேடாதைமட நெஞ்சங் *
கறந்திடத்தைநாடுதேகன்ன... .... . (௰௨)

தோடவிழும்பூங் கோதைத்தோகையுடனையிப்
போது; தேடினவர்போய்விட்டார் தேறியிரு-
நாடிநீ, யென்னைநினைத்தாவிடுப்பிலுதைப்பே
ணு, னுன்னைநினைத்தாலுதை..... ..... .. .....(௰௩)

வாசற்படிகடந்துவாராதபிச்சைசச்சிங் ... *
காசைப்படுவதில்லையண்ணலே- யாசைதனைப்,
பட்டிறந்தகாலமெலாம்போதும்பரமேட்டி *
சுட்டிறந்தஞானத்தைச்சொல்... ....... (௰௪)

கண்டங்கரியதாங்கண் மூன்றுடையா ... *
மண்டத்தைப்போலவழகியதாந்- தொண்ட *
ருடலுருகத்தித்திக்குமோங்குபுகழொற்றிக் *
கடலருகே நிற்குங்கரும்பு........ ..........(௰௫)

ஓடுவிழுந்துச்சிப்பாயு மொன்பதுவாய்ப்பு
ண்ணுக், கிடுமருந்தையானறிந்து கொண்டே
ன்- கடுவருந்துந்: தேவாதிதேவன் றிருவொற்
றியூர்த்தெருவிற், போவாரடியிற்பொடி. ௰௬

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம்வெ
ண்ணீறு; காவனங்களெல்லாங்கணநாதர் பூவு
லகில், வீதிசிவலோகமென்றென்றேமெய்த்தவ
த்தோர், ரோதுந்திருவொற்றியூர் ..... ... (௰௭)

நச்சரவம்பூண்டானை நன்றுந்தொழுவதுவு... *
மிச்சையிலே தானங்கிருப்பதுவும்-பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும்வந்துதிருவாசலிலே *
தூங்குவதுந்தானே சுகம் ... ......... ..... (௰௮)
இருக்குமிடந்தேடிபென்பசிக்கேயன்ன ..... *
முருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன்-பெ
ருக்க, வழைத்தாலும்போகேனரனே யென்
றேக,மிளைத்தாலும்போகேனினி...... (௰௯)
விட்டுவிடப்போகுதுயிர்விட்டவுடனேயுட
லைச், சுட்டுவிடப்போகின்றார்சுற்றத்தார்- பட்
டதுபட், டென்னேரமுஞ்சிவனையேத்துங்கள்
போற்றுங்கள்,சொன்னேனதுவேசுகம் (௨௰)
ஆவியொடுகாயமழிந்தாலுமேதினியிற்..... ..... *
பாவியென்றுநாமம்படையாதே - மேவியசீர்,
வித்தாரமுங்கடம்பும்வேண்டா மடநெஞ்சே,
செத்தாரைப்போலேதிரி ............... ........ (௨௧)
ஆரூரரிங்கிருக்கவவ்வூர்த்திருநாளென் ....... *
றாரூர்கடோறுமுழலுவீர்- நேரோ ........ .. *
யுளக்குறிப்பைநாடாதவூமர்காணீவிர்..... ... *
விளக்கிருக்கத்தீத்தேடுவீர் ....... ..... (௨௨)
எத்தனையூரெத்தனைவீ டெத்தனைதாய்பெற்
றவர்க, ளெத்தனைபேரிட்டழைக்க வேணென்
றே- னித்த, மெனக்குக்களையாற்றுயேகம்பாக
ம்டா, வுனக்குத்திருவிளையாட்டோ.. (௨௩)
மன்னுந்தணலாறவானும்புகையாற... .... *

வெண்ணரிய தாயுமிளைப்பாறப் - பண்ணுமப
ன்; கையாறவுமடியேன் காலாறவுங்கண்டா...*
ளையா திருவையாறு .... ..... ..... ..... .... .... (௨௪)

இப்பிறப்பை நம்பி யிருப்பனோ நெஞ்ச
கம்ம வைப்பிருக்கவா சன்மனையிருக்கச் - சொ
ப்பனம்போல்; விக்கிப்பற்கிட்டக்கண் மெத்த
ப்பஞ்சிட்டப்பைக்; கக்கிச்செத்தக் கொட்டக்க
ண்டு ........ ....... ......... .. .. .... (௨௫)

மேலுமிருக்க விரும்பினையே வெள்விடை
யோன்; சீலமறிந்திலையேசிந்தையே - சால்கை
க்குக், கொட்டையிட்டுமெத்தையிட்டுக் குத்தி
மொத்தப்பட்டவுடற்; கட்டையிட்டுச்சுட்டுவி
டக்கண்டு .. ................ ........... ... (௨௬)

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப்
போலவே, யன்புவைத்து நெஞ்சேயலைந்தாயே
வன்கழுக்க; டத்தித்தத்திச்சட்டைதட்டிக் கட்
டிப்புட்டுக், கத்திக்குத்தித்தின்னக்கண்டு (௨௭)

இன்னம்பிறக்கவிசைவையோ நெஞ்சமே *
மன்னரிவரென்றிருந்துவாழ்ந்தவரை- முன்னே
மெரிந்தகட்டைமீதிலிணக்கோவணத்தை . *
யுரிந்துருட்டிப்போட்டதுகண்டு .. ... (௨௮)

முதற்சங்கமுதூட்டுமொய்குழலார் தம்மை.*
நடுச்சங்கநல்விலங்குபூட்டுங்- கடைச்சங்க ..*
மாம்போதனவூதுமம்மட்டோவிம்மட்டோ*
நாம்பூமிவாழ்ந்தநலம் .. ........ ........ (௨௯)

பொய்யையொழியாய்புரைலைவிடாய்காளத்தி*
யையரோயென்னுயறஞ்செய்யாய்-வெய்ய....*
சின்மையொழியாய்திருவெழுத்தைத்தோதாய்
மனமேயுனக்கென்னமாண்பு.... ......... (௰)

கருவாய்க்கிருவிரன்மேலறுண்டிருக்கும்...*
கருவாய்க்கோகண்கலக்கப்பட்டாய்திருவாரூர்
தேரோடும்வீதியிலேசெத்துக்கிடக்கின்றாய்.*
நீரோடுந்தாரைக்கா நீ ......... ............. ....(௰௧)

மாதாவுடல்சலித்தாள் வல்வினையேன் கால்ச
லித்தேன்; வேதாவுங்கைசலித்து விட்டானே-
நாதா, விருப்பையூர்வாழ்சிவனே யின்னமோ
ரன்னை; கருப்பையூர்வாராமற்கா........ (௰௨)

அத்திமுதலெறும்பீறனவுயி ரத்தனைக்குஞ்.*
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகா- மெத்தப் .....*
பசிக்குதையாபாவியேன்பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோணரோ.................(௰௩)

எத்தனைநாள்கூடியெடுத்தசரீரமிவை ... *
யத்தனையுமண்டின்பதல்லவோ- வித்தகனார் .*
காலைப்பிடித்துமெள்ளக் கங்குல்பக லற்றிடத்
தே, மேலைக்குடியிருப்போமே... .. .... (௰௪)

எச்சிலென்றுசொல்லியிதமகிதம்பேசாதே *
யெச்சிலிருக்குமிடமறியீ- ரெச்சிறனை..... ....*
யுய்த்திருந்துபார்த்தா லொருமை வெளிப்படு
மபின், சித்தநிராமயமாமே ............ ...(௧௫)

காலன் வருமுன்னேகண்பஞ்சடை- முன்னே *

பாலுண்கடைவாய்படுமுன்னே - மேல்விழுந்
தே, யுற்றாரழுமுன்னேயூரார்சுடுமுன்னே.. *
குற்றாலத்தானையேகூர் ........................ (௬௯)

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொ
ட்டமுலை; யெத்தனைபேர்பற்றியிழுத்த விதழ்
நித்தநித்தம், பொய்யடாபேசும் புவியின்மட
மாதனைவிட்; டுய்யடாவுய்யடாவுய் .... .. (௭௦)

இருப்பதுபொய் போவதுமெய்யென் றெ
ண்ணிநெஞ்சே,யொருத்தருக்குந் தீங்கினை நீயு
ன்னாதே- பருத்ததொந்தி, நம்மதென் றுநாமி
ருப்ப நாய்நரிகள் பேய்கழுகு, தம்மதென் று
தாமிருக்குந்தான் ............................ (௭௧)

எத்தொழிலைச்செய் தாலு மேதவத்தைப்பட்
டாலு, முத்தர்மனமிருக்குமோனத்தே- வித்த
கமாய்;காதிவிளையாடியிருகைவீசிவந்தாலுந்;
தாதிமனநீர்க்குடத்தேதான் ..................(௭௨)

மாலைப்பொழுதினறு மஞ்சளனாத் தேகுளி
த்து, வேலைமினிச்கிட்டுவிழித்திருந்து-சூலாகி
ப், பெற்றாள்வளர்த்தாள்பெயரிட்டாள் பெற்ற
பிள்ளை, பித்தானலென் செய்வான்பின்.(௭௩)

## விருத்தம்.

வான்றேமறையேயோ மறைதேடும்பொ
ருளேயோ,வூன்றேடுமுயிரேயோவுயிர்தேடுமு
ணர்வேயோ, தான்றேடநான்றேடச் சகலமெ
லாந்தனைத்தடே, நான்றேடிநான்காண நானு
ரோ நானுரோ........................ (௧)

பட்டணத்தார் வெண்பா
முற்றுப்பெற்றது.